[1969 மார்ச் 24

திரு என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, கொடிநாள் விழாவை யொட்டி ஏற்பாடு செய்யப்பட்ட திரைப்படக் காட்சிகளுக்கு வரி விலக்கு அளிக்கப்படுவதைப்போல பள்ளிக்கட்டடநிதி, கல்வி வளர்ச்சி நிதி போன்றவைகளுக்காக ஏற்பாடு செய்யப்படுகின்ற திரைப்படக் காட்சி களுக்கும் கல்வியின் வளர்ச்சியை கருத்திலே கொண்டு அரசாங்கம் வரி விலக்கு அளிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இது மாதிரியான திரைப்படக் காட்சிகளுக்கு விதி விலக்கு அளிக்கப்படவில்லை.

திரு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, பிளாக் டே அன்றைய தினம் திரையிடப்படுகின்ற திரைப்படக் காட்சிகளுக்கு வரி விலக்கு அளித்ததாகச் சொன்னார்கள். இதனால் அரசாங்கத்துக்கு எவ்வளவு நஷ்டம் ? இப்படிப் பட்ட விலக்குகளை வேறு எதற்காவது கொடுத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அவைப்பற்றி விவரம் இல்லை.

திரு. டி. மார்டின் : ஸ்பீக்கர் சார், இந்தக் கொடி நாள் விழாவை ஏற்பாடு செய்தது யார் ? அதற்காக எவ்வளவு செலவு செய்யப்பட்டது ? அந்தச் செலவை யார் யார் பொறுப்பேற்றுக்கொண்டார்கள் ?

The Hon. Thiru K. A. MATHIALAGAN : The question does not arise.

திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, இவ்விதம் நடத்தப்பட்ட திரைப் படக் காட்சிகளினால், கொடி நாள் விழாவுக்காக ஏற்பாடு செய்யப் பட்ட காட்சிகளினால் மொத்தம் எவ்வளவு வசூலிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இங்கு உள்ள கேள்வி வரி விதிவிலக்கு அளிக்கப்பட்டதா என்பதுதானே தவிர, கொடிநாள் விழாவினுடைய விவரங்கள் பற்றியதல்ல. இந்தக் கேள்வியை தனி யாகப் போட்டால் அதற்கு பதில் அளிக்க முடியும்.

கால்நடை மருத்துவ மருந்துகள்.

*434—வினா : **புலவர். பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு உணவு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடை மருத்துவத்திற்குரிய மருந்துகள் நம் நாட்டிலேயே தயாரிக்கப்படுகின்றனவா ?

(இ) ஆமெனில், எங்கெங்கே மருந்து செய் மனைகள் இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :

(அ) கால்நடை மருத்துவத்திற்குரிய பெரும்பான்மை மருந்துப் பொருள்களும், மருந்துகளும் பொதுவாக நமது நாட்டில் தனியார் துறை யில் தயாரிக்கப்படுகின்றன. மருத்துவப் பொருள்கள் கிடங்கில் கிடைக்காம லும் கால்நடை மருத்துவத் தொழிலுக்கு இன்றியமையாது தேவைப்படு பவையுமான உரிமை சார்ந்த சில மருந்துகள் அவசியத்தை முன்னிட்டுச் சில வேளைகளில் வெளிநாட்டிலிருந்து வாங்கப்படுகின்றன.

(இ) நோய்த் தடுப்புப் பணிக்குத் தேவைப்படும் உயிரியல் மருந்துகள் ராணிப்பேட்டையிலுள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்திலும் உத்திரப்பிரதேசம் இஸத் நகரிலுள்ள இந்தியக் கால்நடை ஆராய்ச்சி நிலை யத்திலும் தயாரிக்கப்படுகின்றன. வெறிநாய்க் கடிநோய்க்குத் தேவையான ஊசி, மருந்து குன்னூர் பாஸ்டர் நிலையத்திலும், இஸத்நகர், இந்தியக் கால்நடை ஆராய்ச்சி நிலையத்திலும் பம்பாய் ஹப்கின் நிலையத்திலும்

1969 மார்ச் 24]

தயாரிக்கப்படுகின்றது. மருந்துப் பொருள்களும் மருந்துகளும் தயாரிக்கும் தனியார் நிறுவனங்கள் பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.

புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்திலே அனைத்து மருந்துகளையும் தயாரிப்பதற்கு அரசு முயற்சி எடுத்து, ஆவன செய்ய முற்படுமா என்பதை அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : தமிழகத்தில் சில மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. வேறு சில மருந்துகள் வெளி நாட்டிலிருந்தும் நோயைப் போக்கவேண்டிய அவசியத்திற்காக இறக்குமதி செய்ய வேண்டி இருக்கிறது.

திரு அர். கருப்பையா : தலைவர் அவர்களே, கால்நடைகளுக்கு வருகின்ற நெஞ்சடைப்பான் சப்பை நோய் போன்ற வியாதிகளுக்கு இன்னும் சரியான மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை என்று டாக்டர்கள் கூறுகிறார்கள். எனவே, தனியாக டாக்டர் குழுவை நியமித்து, முயற்சி செய்து கால்நடைகளுக்கு வருகின்ற இத்தகைய கொடிய வியாதிகளிலிருந்து அவற்றைக் காப்பாற்ற அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : டாக்டர்களிடமிருந்து அந்தக் குறை வரவில்லை. கனம் அங்கத்தினரிடமிருந்துதான் வருகிறது. இது பற்றி டாக்டர்களைக் கேட்டால் அதற்கு வேண்டிய மருந்துகள் இருப்பதாகத் தான் தகவல் கொடுக்கிறார்கள்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, நமது தமிழகத்தில் இராணிப்பேட்டையில்தான் நன்றாக மருந்து தயாரிக்கிறார்கள். நானே நேரில் பார்த்தேன். அதைப் பற்றிச் சந்தேகம் இல்லை. ஆனாலும் அதை இன்னும் கொஞ்சம் டெவலப் செய்வதற்கு, சில ஆராய்ச்சிகள் செய்வதற்கு அரசாங்கத்தில் ஏதாவது திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : இராணிப்பேட்டை கால்நடை மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் நல்ல ஆராய்ச்சியும் நல்ல மருந்துகளும் கண்டுபிடிக்கிறார்கள். மலிவான விலையிலும் கூட அந்த மருந்துகள் விற்கப்படுகின்றன.

திரு. கு. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, கால்நடைகளுக்கு சித்த வைத்திய மருந்துகளை பயன்படுத்த வேண்டுமென்று அரசு ஆராய்ந்ததா ? அதைப் பயன்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஏ. கோவிந்தசாமி : கால்நடைகளுக்கும் தமிழ் மருத்துவர்கள் நல்ல மருந்து கொடுத்துத்தான் வருகின்றார்கள். ஆனால் அது பற்றி அரசாங்கம் தனிப்பட்ட முறையிலே முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை. ஆஸ்பத்திரி இல்லாத இடங்களில் தனிப்பட்ட கால்நடை வைத்தியர்களும் சிறப்பான மருந்துகளைக் கொடுத்து வருகின்றார்கள். மாடுகளுக்கும் மற்ற கால்நடைகளுக்கும் உண்டாகக் கூடிய வியாதிகளும் தீர்ந்து வருகின்றன.

உணவு உதவித் தொகை.

*435—வினா—**திரு. ஏ. எம். இராஜா :** மாண்புமிகு உணவு, வேளாண்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திய அரசிடமிருந்து உணவு உதவித் தொகை யாதேனும் இந்த அரசாங்கம் கேட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?